**லங்கா சோல்ட் லிமிடெட் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

லங்கா சோல்ட் லிமிடெட்டின் (''கம்பனி'') 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து கம்பனியின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனியின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமத்துடனான தொடர்புடன் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) நியமத்தின் 17.19 ஆம் பிரிவின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் கம்பனி அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முழுமையாக பெறுமானத்தேய்வு செய்து முடிவடைந்த நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 75,376,038 ஆகும். அந்த சொத்துக்களுக்கிடையே தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களை இனங்கண்டு பயன்தரு ஆயுட்காலம் சரியாக மீளாய்வு செய்யப்படாமையால் ஏற்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வழுவை நியமத்தின் 10.15 - 10.18 ஆம் பிரிவுகளின் பிரகாரம் சரிசெய்வதற்கும், தொடர்ந்தும் பயன்படுத்தப்படாத சொத்துக்களை பொருத்தமான பிரகாரம் அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | நியமத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடைமுறையல்லா சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) நியமத்தின் 8.5(பீ) பிரிவின் பிரகாரம் நிறுவனத்தினால் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் கம்பனியின் ஐயக்கடன் ஏற்பாட்டுக் கொள்கை வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. மேலும் 2020 ஆம் ஆண்டின் போது மெதுவாக | காலாவதியான கடன்பட்டோர் காணப்படாமையால் ஐயக் கடன் ஏற்பாட்டுக் கொள்கை வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | நியமத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டுக் கொள்கை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப் படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அசைவுறும் இருப்புக்களுக்காக ரூபா 4,000,000 ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்காக பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கையும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | | |
| (இ) | நியமத்தின் 13.4 ஆம் பிரிவின் பிரகாரம் தேறிய தேறக்கூடிய பெறுமதி அல்லது கிரயம் இந்த இரண்டு பெறுமதியில் குறைவான பெறுமதியில் இருப்பு மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் கம்பனியினால் இருப்புக்களின் தேறிய தேறக்கூடிய பெறுமதி மதிப்பீடு செய்யப்படாதிருந்ததுடன் கிரயம் ரூபா 393,325,917 ஆக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இருப்பு பெறுமதியை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு உடன்படுகின்றோம். | நியமத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேறிய தேறக்கூடிய பெறுமதி அல்லது கிரயம் இந்த இரண்டு பெறுமதியில் குறைவான பெறுமதியில் இருப்பு மதிப்பிடப்பட்டு காண்பிக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 யூன் 11 முதல் 2020 நவம்பர் 13 வரையான காலப்பகுதியின் போது உப்பு போக்குவரத்திலிருந்து கிடைத்த வருமானத்தில் ரூபா 7,579,030 தொகை காணாமல் போயிருந்ததுடன் அதனுடன் தொடர்புடைய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு பதிலாக அந்த மொத்த வருமானத்திற்காகவும் ஐயக்கடன் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த வருமானத்தில் 2019 ஆம் ஆண்டிற்குரிய வருமானமும் 2020 ஆம் ஆண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இந்தப் பெறுமதி கடன்பட்டோரின் இறுதி மீதியில் 18 | இந்த நிதி மோசடி 2021 ஆம் ஆண்டின் ஆரம்பத்தின் போது வெளிப்படுத்த முடியுமாக இருந்தது. அந்த வெளிப்படுத்தல்களின் பிரகாரம் அதற்குரிய சீராக்கங்கள் 2020 இன் கணக்கு கூற்றுக்களில் சீராக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான வெளிப்படுத்தல் 2021 ஆம் ஆண்டின் கணக்கு கூற்றுக்களில் மேற்கொள்வதற்கு உடன்படுகின்றோம். | ஒவ்வொரு காலப்பகுதிக்கும் உரிய வருமானங்கள் தனித்தனியாக இனங்காணப்பட வேண்டும், போதியளவான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் மற்றும் பொறுப்புவாய்ந்த தரப்பினரிடமிருந்து இழந்து போன வருமானத்தை அறவிடுவதற்காக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சதவீதமான கணிசமான பெறுமதியைக் கொண்டிருந்ததுடன் அது கம்பனியின் கடன்பட்டோரின் தோற்றத்தை மாற்றுவதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. | | |
| (ஆ) | விற்பனை ஊக்குவிப்பு படி விற்பனை செலவினமாக இருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டிற்குரியதாக வழங்கப்பட்ட ரூபா 77,548,125 தொகையான ஊக்குவிப்பு படி மற்றும் விற்பனை ஊக்குவிப்பு படியாக இலவசமாக பகிர்ந்தளிக்கப்பட்ட விற்பனைப் பெறுமதி ரூபா 44,919,575 தொகையான உப்பு இருப்புக்கள் 1556 மெற்றிக்தொன் விற்பனைக் கிரயத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | இந்தப் பெறுமதியை விற்பனை செலவினத்தில் உள்ளடக்கியிருந்த போதிலும் பணிப்பாளர் சபை தீர்மானத்தில் அப்பெறுமதி விற்பனைக் கிரயத்தில் உள்ளடக்க வேண்டியிருந்தது. அந்த தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | விற்பனை ஊக்குவிப்பு படியை இலக்காகக் கொண்ட விற்பனையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட செலவினமாக இருந்தமையால் (மறைமுக கிரயம்) சந்தைப்படுத்தல் செலவினமாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படல் வேண்டும். |
| (இ) | கம்பனியால் Artimea விற்பனை வருமானம் ரூபா 1,242,700 மற்றும் சேவை நிலையத்திலிருந்து கிடைத்த வருமானம் ரூபா 1,850,344 தொகைகள் ஏனைய வருமானமாக விரிவான வருமானக் கூற்றில் காண்பிக்கப்பட்ட போதிலும் அதற்குரியதாக செலவிடப்பட்ட முறையே ரூபா 6,096,794 மற்றும் ரூபா 7,539,935 ஆன செலவினங்கள் உப்பு விற்பனை கிரயத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | அந்த வழுக்கள் 2021 ஆம் ஆண்டின் ஒப்பீட்டு தகவல்கள் சமர்ப்பிக்கும் போது சரிசெய்வதற்கு உடன்படுகின்றோம். | வருமானம் மற்றும் செலவினங்களை சரியான வகைப்படுத்தலின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காண்பித்தல் வேண்டும். |
| (ஈ) | 2020 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட இருப்பு மெய்மையாய்வின் போது நுகர்வுப் பொருட்கள் மற்றும் உதிரிப்பாக இருப்பில் 137 விடயங்களில் பற்றாக்குறையும், 135 விடயங்களில் மிகையும், 10 விடயங்களில் சேதங்களும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் இந்த வழுக்களை சரிசெய்வதற்கு எதிர்பார்க்கின்றோம். | பொருத்தமான நடவடிக்கைகளை விரைவாக மேற்கொண்டு நிதிக் கூற்றுக்களில் தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எனினும், கணக்காய்வு திகதியான 2021 நவம்பர் 22 ஆந் திகதி வரையிலும் அந்த வழுக்களை சரிசெய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | 2020 ஆம் ஆண்டின் போது ரூபா 49,814,122 கூட்டுத் தொகையான 07 செலவின விடயங்களின் செலவின வகைப்படுத்தல்கள் திருத்தப்பட்டிருந்த போதிலும் அந்த செலவினங்களுக்குரிய முன்னைய ஆண்டின் ஒப்பீட்டுத் தகவல்கள் மீண்டும் வகைப்படுத்தப்பட்டு காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2021 ஆம் ஆண்டில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது அந்த வழுக்களை சரிசெய்வதற்கு உடன்படுகின்றோம். | முன்னைய ஆண்டின் ஒப்பீட்டுரீதியான தகவல்களை சரியாக வெளிப்படுத்துதல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய பணம்

### 1.6.1 செலுத்தவேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியின் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 46,005,842 ஆக இருந்ததுடன் அந்த கடன்பட்டோர் மீதியில் 05 வருடங்களை விஞ்சிய ரூபா 15,075,607 தொகையான மீதியொன்று அவதானிக்கப்பட்டது. அந்தக் கடன் மீதியை தீர்த்து வைப்பதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம். | தீர்த்து வைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் ஏனைய செலுத்த வேண்டிய மீதியின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள உரித்துக் கோரப்படாத சந்தர்ப்பம் (Unclaimed | பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம். | உரிய மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | Salary) மீதியில் 2016 ஆம் ஆண்டு முதல் செலுத்தப்படாத கூட்டுமொத்தமான ரூபா 2,521,917 சம்பள மீதியொன்று காணப்பட்டதுடன் அதனை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் 11 ஆவது பிரிவு | ஊழியர் சேமலாப நிதியத்திற்காக ஊழியர் ஒருவரிடமிருந்து அறவிட வேண்டிய 8 சதவீத பங்களிப்பு பணத்தை அதிகரிப்பதற்காக தொழில் பெறுவோரினால் தொழில் ஆணையாளரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும் கம்பனியினால் அந்த அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமல் கம்பனியின் நிரந்தர ஊழியர்களின் உழைப்பின் அடிப்படையில் அந்த சதவீதம் 10 வீதம் வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. | தொழில் ஆணையாளர் நாயகத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு உடன்படுகின்றோம். | பங்களிப்பு பண சதவீதத்தை அதிகரித்தமை தொடர்பாக ஊழியர் சேமலாக நிதியச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2018 திசெம்பர் 07 ஆந் திகதிய பீஈடி 03/2018 ஆம் இலக்கம் மற்றும் 2020 திசெம்பர் 12 ஆந் திகதிய 03/2020 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் மிகையூதிய படி செலுத்துவதற்கு தேவையான தகைமை பெறுவதாயின் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் அந்த நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2021 செப்தெம்பர் 10 ஆந் | 2021 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதம் ரூபா 28,362,054 மிகையூதிய படி பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் செலுத்தப்பட்டிருந்தது. எதிர்காலத்தில் மிகையூதிய படி செலுத்துவதாயின் சகல முன் அங்கீகாரமும் பெற்றபின் செலுத்த நடடிக்கை எடுப்பதற்கு உடன்படுகின்றோம். | அரசாங்கத்தின் கம்பனி, திறைசேரியின் பொது முயற்சிகள் சுற்றறிக்கைகளுக்கு இணங்க வேண்டியிருந்த மையால் அந்த சுற்றறிக்கைகளுக்கு புறம்பாக நடவடிக்கை எடுப்பதாயின் உரிய திணைக்களத்தின் முன் அங்கீகாரம் பெற்றுக் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் போது 2020 ஆம் ஆண்டின் இலாபத்தை அடிப்படையாகக் கொண்டு ரூபா 28,362,054 மிகையூதிய படியாக 2021 மே மாதத்தின் போது செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே இந்த கொடுப்பனவிற்காக திறைசேரியின் முன் அங்கீகாரமும் பெறப்பட்டிருக்கவில்லை. | | கொள்ளப்படல் வேண்டும். |
| (இ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரச முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) | 9.2, 9.3.1 மற்றும் 9.14 ஆம் பிரிவுகள் | கம்பனியின் நிறுவன கட்டமைப்பு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் கம்பனியால் ஆட்சேர்த்தல் மற்றும் பதவியுயர்வு நடைமுறை மற்றும் மனிதவள முகாமைத்துவத்திற்கான கைநூல் என்பன தயாரிக்கப்பட்டு அதற்காக பொது முயற்சிகள் திணைக்களத்தின் இணக்கப்பாடு பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. மேலும் 2017 மே 03 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் குழுக் கூட்டத்தின் போது கம்பனியின் ஊழியர் எண்ணிக்கையை தீர்மானிக்கும் போது திறைசேரியின் | கம்பனிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை, பதவியுயர்வு நடைமுறை, சம்பள கட்டமைப்பு மற்றும் செயற்பாட்டு கைநூல் என்பன உரிய பிரகாரம் தயாரிக்கப்படாதிருந்த துடன் இது தொடர்பாக பணிப்பாளர் சபைக்கு சபை பத்திரமொன்று 2020 செப்தெம்பர் 27 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சுயாதீன உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு மேற்கூறப்பட்ட சகல செயல் நடைமுறைகளையும் தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் தற்பொழுது மேற்கொள்ளப்படுகின்றது. | பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் சகல அரசாங்க கம்பனிகளினால் உரித்தாக்கப்பட வேண்டியிருந்த மையால் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அங்கீகாரம் பெறவேண்டியமை காண்பிக்கப்பட்ட போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | | |
| (ii) | 5.2.3 ஆம் பிரிவு | 2020 ஆம் ஆண்டிற்கான பாதீடு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டு முதல் குறித்துரைத்த முறைமையொன்றில் தயாரித்து நடவடிக்கை எடுப்பதற்கு உடன்படுகின்றோம். | நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு முன் பாதீடு தயாரிக்கப்பட்டு சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தேவையான அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |
| (iii) | 6.3.1 ஆம் பிரிவு | கம்பனியால் 2019 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அண்மைய 05 வருடங்களின் பிரதான நிதி தகவல்கள், கணக்காய்வு குழு அறிக்கை, பணிப்பாளர் சபை மற்றும் உயர் முகாமைத்துவ உத்தியோகத்தர் தொடர்பான சுருக்க அறிமுகப்படுத்தல்கள், தலைவரின் மீளாய்வு போன்ற தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | அடுத்துவரும் ஆண்டறிக்கையை தயாரிக்கும் போது தேவையான சகல விடயங்களையும் உள்ளடக்குவதற்கு உடன்படுகின்றோம். | சுற்றறிக்கையில் காணப்படுகின்ற ஏற்பாடுகளுக்கு இணங்க ஆண்டறிக்கை தயாரிக்கப்படல் வேண்டும். |

## 1.8 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியால் பேணிச் செல்லப்படுகின்ற 06 நடமுறைக் கணக்குகளில் மேலதிகப் பற்று மீதி காணப்பட்டமை காரணமாக அந்த மேலதிகப் பற்று மீதியின் அடிப்படையில் வட்டியாக ரூபா 15,068,093 செலவினமொன்று செய்யப்பட்டிருந்தது. | கம்பனியின் தேவையின் பிரகாரம் அவ்வவ்போது வங்கி மேலதிகபற்று வசதிகள் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் பெறப்பட்டிருந்தது. | நிதி முகாமைத்துவம் கம்பனியின் முகாமைத்துவத்தின் பொறுப்பாக இருந்தமையால் கம்பனியின் காசு பாய்ச்சல்களை வினைத்திறனாக முகாமைத்துவம் செய்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 9,302,068 இலாபமாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 262,162,026 ஆகும். அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதிவிளைவுகளில் ரூபா 271,464,094 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது விற்பனை வருமானம் ரூபா 234,806,158 இனால் குறைவடைந்திருந்த போதிலும் விற்பனை கிரயம் ரூபா 618,192,619 இனால் குறைவடைந்தமை இந்த நிதி விளைவுகளின் அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 விகிதாசாரப் பகுப்பாய்வு

| | 2020 | 2019 |
|---|---|---|
| நடைமுறைச் சொத்து விகிதம் | 1.85 | 1.23 |
| விரைவு சொத்து விகிதம் | 0.20 | 0.11 |
| நிதி விகிதம் | 0.09 | 0.08 |

விரைவுச் சொத்து விகிதம் 0.20 மற்றும் நிதி விகிதம் 0.09 என்ற கீழ் மட்டத்தில் காணப்பட்டமையால் கம்பனியின் குறுங்கால பொறுப்புக்களை தீர்க்கும் போது பிரச்சினை எழும் நிலைமையொன்று காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. மேலும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2020 ஆம் ஆண்டின் கடன்பட்டோர் மீதி 196 சதவீதத்தினால் உயர்வடைந்திருந்ததுடன் கம்பனியின் விற்பனைகளில் கணிசமான அளவு கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்தமையும் அது கம்பனியின் திரவ நிலைமைக்கு பாதகமாக தாக்கமளித்திருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியால் மஹலேவாய மற்றும் புந்தல என்ற உப்பளங்களில் தெங்கு பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்றதுடன் அந்த பயிர்ச் செய்கைகளில் கடந்த 03 வருடங்கள் மற்றும் நடப்பாண்டில் மேற்கொள்ளப்பட்ட செலவினம் மற்றும் கிடைத்த வருமானத்தை கவனத்தில் கொள்ளும் போது தொடர்ச்சியாக தேறிய நட்டமொன்று பெறப்பட்டிருந்தது. 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது பெறப்பட்ட தேறிய நட்டம் முறையே ரூபா 7,517,387 தொகை, ரூபா 7,050,800 | தெங்கு பயிர்ச் செய்கைகளில் இருந்து கவனத்தில் கொள்ளக் கூடிய அளவில் விளைச்சலொன்றை பெற்றுக் கொள்வதற்காக தொடர்ச்சியாக கம்பனி கவனம் செலுத்தியிருந்ததுடன் முன்னைய ஆண்டினை விட ஊழியர் கிரயம் தற்போது குறைக்கப்பட்டுள்ளது. தெங்கு பயிர்ச் செய்கை தொடர்பாக முகாமைத்துவம் நிரந்தரமாக கவனம் செலுத்தியிருந்ததுடன் மேலும் வினைத்திறனை அதிகரித்து கிரயத்தை குறைக்கும் வகையில் | வினைத்திறனாக செலவினங்களை செய்வதற்கும் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கும் முகாமைத்துவம் கண்காணித்துக் கொள்ளல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் ரூபா 7,305,655 ஆக இருந்ததுடன் 2020 ஆம் ஆண்டின் போது அது ரூபா 8,086,837 வரை அதிகரித்திருந்தது. அதன் பிரகாரம் இந்த பயிர்ச் செய்கைக்காக செலவிடப்பட்ட செலவினம் சிக்கனமற்ற செலவினமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | எதிர்வரும் ஆண்டில் நடவடிக்கை எடுப்பதுடன் தொடர்ந்தும் அதற்காக கவனம் செலுத்துவதற்கு இணங்குகின்றோம். | |
| (ஆ) | மேசை உப்பு உற்பத்தி செய்வதற்காக 2011 ஆம் ஆண்டின் போது இந்திய கம்பனியிலிருந்து ரூபா 24,671,591 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட 04 இயந்திரங்கள் குறித்துரைத்த மாதிரிக்கு பொருத்தமானதாக கொள்வனவு செய்யப்படாமையின் காரணமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் 09 வருட காலமாக தொழிற்சாலையில் விளைவற்றுக் காணப்பட்டது. | இந்த 04 இயந்திரங்களும் 09 வருடங்கள் முழுவதும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் தொழிற்சாலையில் விளைவற்று காணப்பட்டமைக்கான காரணம் அது குறித்த மாதிரிக்கு பொருத்தமானதாக கொள்வனவு செய்யப்படாமையாகும். பொறியியலாளரின் மூலம் பல்வேறு சந்தர்ப்பங்களில் அவை பழுதுபார்க்கப்பட்டு பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு முயற்சிக்கப்பட்ட போதிலும், அது தோல்வியடைந்திருந்தது. அதன் பிரகாரம் தற்போது அந்த 04 இயந்திரங்களையும் ஏலத்தில் விற்பனை செய்வதற்கு பணிப்பாளர் சபை ஆலோசனை வழங்கியுள்ளது. | தேவையினை சரியான பிரகாரம் இனங்கண்டு சொத்துக்களை கொள்வனவு செய்வதற்கும், அவற்றை வினைத்திறனாக பயன்படுத்து வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | கம்பனியின் உத்தியோகத்தர்களின் சம்பளங்களை தயாரிப்பதற்காக வெளி நிறுவனமொன்றிற்கு ஒவ்வொரு மாதமும் ரூபா 30,523 வீதம் செலுத்தப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. கம்பனியின் கணக்குகள் பிரிவில் உத்தியோகத்தர்கள் இருக்கும் போது இன்னொரு நிறுவனத்திற்கு அதற்காக பணம் செலுத்தும் தேவையொன்று விளக்கப்பட்டிருக்கவில்லை. | சில சந்தர்ப்பங்களின் போது இது தொடர்பாக முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருந்த போதிலும் தேவையான மென்பொருள் வசதிகள் காணப்படாமையால் இதுவரை உரிய பணிகளை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. எதிர்காலத்தில் மென்பொருள் வசதிகளைப் பெற்று இந்த பணிகளை மேற்கொள்வதற்கு கவனத்தில் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிறுவன மற்றும் நிர்வாக செலவினங்களை குறைக்கும் முறைமை தொடர்பாக கவனம் செலுத்தல் வேண்டும். |
| (ஈ) | கம்பனியினால் விற்பனை முகவர்கள் ஊடாக லக் உப்பு உற்பத்தி விற்பனை செய்யப்படுவதுடன் 2020 ஆம் ஆண்டின் போது ஒரு கிலோகிராம் லக் உப்பு விற்பனை முகவருக்கு விற்பனை செய்யப்படுகின்ற விலையான ரூபா 40 சில | காணப்படுகின்ற சந்தை போட்டி நிலைமையின் அடிப்படையில் 2018 ஒக்தோபர் மாதம் முதல் லக் உப்பு பொதியொன்றிற்காக கிடைக்கின்ற ஊக்குவிப்பு படி ரூபா 150 மற்றும் ரூபா 100 ஆக திருத்தப்பட்டிருந்ததுடன் 01 மெற்றிக்தொன் உப்பு இன் | கம்பனியின் வருமானத்தை அதிகரிக்கும் வகையில் விற்பனை கொள்கை யொன்றை தயாரித்து அமுல்படுத்து வதற்கு முகாமைத்துவம் |

| | | | |
|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களின் போது ரூபா 12.50 இனாலும், ரூபா 15 இனாலும் வீழ்ச்சியடைந்திருந்ததுடன் 2020 ஆம் ஆண்டு இறுதி வரையிலும் 01 கிலோகிராம் விற்பனை விலை ரூபா 27.50 ஆகும். சந்தை விலை ரூபா 60 நிலையாக காணப்பட்ட போதும் இவ்வாறு விற்பனை விலை கவனத்தில் கொள்ளக் கூடிய சதவீதத்தில் அதாவது 31.25 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கிரய நலன் பகுப்பாய்வு, சந்தைப் பகுப்பாய்வு, அடிப்படையாக கொள்ளப்பட்ட ஏனைய உரிய குறிகாட்டிகள் மற்றும் நிபுணர்களின் ஏற்றுக் கொள்ளப்பட்ட விலைக் குழுவின் பரிந்துரை என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. அதன் பிரகாரம் உரிய முகவருக்கு விலையினை குறைத்ததன் அடிப்படையில் ரூபா 161,273,875 விற்பனை சலுகையும், ரூபா 42,786,475 தொகையான ஊக்குவிப்பு படியும் செலுத்தப்பட்டிருந்தது. இவ்வாறு லக் உப்பு விற்பனை முகவர்கள் ஊடாக மேற்கொள்ளும் போது லக் உப்பு 01 கிலோகிராம் சந்தை விலை ரூபா 60 மற்றும் கம்பனியின் விற்பனை விலை ரூபா 27.50 ஆன சந்தர்ப்பங்களின் போது ரூபா 32.50 அதாவது சந்தை விற்பனை விலையில் 54.17 சதவீதம் கம்பனிக்கு இழக்கப்பட்டிருந்தது. | வருமானம் ரூபா 32,500 வரை வீழ்ச்சியடைந்திருந்தது. இந்த அதிக ஊக்குவிப்பு படி நிறுவனத்திற்கு நலனாக இல்லாதிருந்தமையால் 2020 மார்ச் 05 ஆந் திகதி முதல் ஊக்குவிப்பு படி பொதியொன்றிற்கு ரூபா 50 வீதம் செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அந்த சந்தர்ப்பத்தில் 01 மெற்றிக்தொன் லக் உப்பு இன் விற்பனை வருமானம் ரூபா 30,000 பெறுமதியாக காணப்பட்டது. 2020 மார்ச் 21 ஆந் திகதி முதல் காணப்பட்ட கொரோனா தொற்று நோய் நிலைமையின் அடிப்படையில் இதுவரை பொதியொன்றிற்காக செலுத்தப்படுகின்ற ரூபா 50 ஊக்குவிப்பு படி கைவிடப்பட்டிருந்ததுடன் ஒரு மெற்றிக்தொன் லக் உப்பு 01 மெற்றிக்தொன் ரூபா 32,500 வரை திருத்தம் செய்யப்பட்டிருந்தது. 2020 ஏப்ரல் மாதம் 10 ஆந் திகதி முதல் கொரோனா தொற்று நோய் நிலைமை மற்றும் இந்த விலை 01 மெற்றிக்தொன் இற்காக ரூபா 34,000 ஆக திருத்தம் செய்ய வேண்டியேற்பட்டிருந்தது. 2020 மே 21 ஆந் திகதி முதல் கொரோனா நிலைமை வீழ்ச்சியடைந்திருந்ததுடன் லக் உப்பு 01 மெற்றிக் தொன்னின் விலை ரூபா 32,000 வரை கீழே குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2020 செப்தெம்பர் மாதம் முதல் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பிரகாரம் முன்னர் காணப்பட்ட ரூபா 75 தொகையான ஊக்குவிப்பு படியை அமுல்படுத்துவதற்கு அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. | பொறுப்பாக இருத்தல் வேண்டும். |
| (உ) | கம்பனியால் லக் உப்பு உற்பத்தி விற்பனையின் அடிப்படையில் விற்பனை முகவர்களுக்கு ஊக்குவிப்பு படியொன்று செலுத்தப்படுவதுடன் அந்த | 2020 ஆம் ஆண்டில் கொரோனா தொற்றுநோய் நிலைமையின் அடிப்படையில் அதிக வசதியீனங்களுக்கு மத்தியில் விற்பனை முகவர்கள் தமது | விற்பனை இலக்கினை அடைந்த விற்பனை முகவர்களுக்கு மாத்திரம் ஊக்குவிப்பு படி செலுத்தப்படுவதை |

| | | | |
|---|---|---|---|
| | ஊக்குவிப்பு படி கணிப்பீட்டின் போது உரிய இலக்கிடப்பட்ட விற்பனையை அடையாத விற்பனை முகவர்களுக்கும் ஊக்குவிப்பு படி வழங்கப்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டின் போது 08 விற்பனை முகவர்களுக்கு இவ்வாறு இலக்கிடப்பட்ட விற்பனையை அடையாதிருந்த போதிலும் ரூபா 981,875 ஊக்குவிப்பு படியாக செலுத்தப்பட்டிருந்தது. | விற்பனை நடவடிக்கைகளை மேற்கொண்டு சென்றமையின் காரணமாக அவர்களுக்கு விற்பனை நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது பிரச்சினைகள் எழுந்திருந்ததுடன் அவ்வாறு குறிப்பிடப்பட்ட 08 விற்பனை முகவர்களுக்காகவும் முன்னாள் தலைவர் மற்றும் பொது முகாமையாளரின் ஆலோசனையின் பிரகாரம் இந்த ஊக்குவிப்பு படி வழங்கப்பட்டிருந்தது. | உறுதிப்படுத்திக் கொள்ளல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |
| (ஊ) | விற்பனை இலக்கை அடைந்து கொள்வதன் அடிப்படையில் விற்பனை முகவர்கள் ஊக்குவிப்பு படிக்கு உரித்தைப் பெறுவதுடன் அந்த ஊக்குவிப்பு படி உப்பு இருப்பு இலவசமாக விநியோகிப்பதன் மூலம் செலுத்தப்படுகின்றது. விற்பனை பிரிவின் மூலம் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டின் போது விற்பனை இலக்கினை அடைவதன் அடிப்படையில் விற்பனை முகவர்கள் உழைத்த ஊக்குவிப்பு படி ரூபா 42,786,475 ஆக இருந்த போதிலும் விற்பனை பெறுமதி ரூபா 44,919,575 தொகையான உப்பு இருப்பு ஊக்குவிப்பு படியாக விற்பனை முகவர்களுக்கு இலவசமாக விநியோகித்ததன் காரணமாக உரிய அளவினை விட கூடுதலாக ரூபா 2,133,100 உப்பு இருப்பு கம்பனியால் ஊக்குவிப்பு படியாக விநியோகிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2020 ஆம் ஆண்டு முதல் லக் உப்பு 01 மெற்றிக்தொன் ரூபா 40,000 வீதம் விற்பனை செய்யப்பட்ட போதிலும் சந்தையில் லக் உப்பு 01 மெற்றிக்தொன் ரூபா 15,000 முதல் விற்பனை செய்தல் பரவலாக காணக்கூடியதாக இருந்தது. எனினும், எங்களின் விற்பனை விலையான ரூபா 40,000 இனை குறைக்காமல் அதற்காக ஊக்குவிப்பு படி வழங்குமாறு காண்பிப்பதற்கு விற்பனை முகவர்களுக்கு ஏதாவது விற்பனை இலக்கொன்றை அறிமுகப்படுத்தி அந்த இலக்கை அடைபவர்களுக்கு இலவச விநியோகித்தலாக இலவசமாக உப்பினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் மூலம் எமது நிறுவனத்திற்கு சந்தையில் லக் உப்பு விலையை கட்டுப்படுத்த முடியுமாக இருக்கும். மேலும் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையினை தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்கும் முடியுமாக இருக்கும். | உழைக்கப்பட்ட ஊக்குவிப்பு படியை சரியாக கணிப்பிடுதல் மற்றும் அதன் அடிப்படையில் இலவசமாக உப்பு இருப்பினை விநியோகித்தல் போன்றவை தொடர்பாக தெளிவான வேலை பகிர்வு மேற்கொண்டு பொறுப்புக்கள் கையளிக்க வேண்டியிருந்ததுடன் உயர் முகாமைத்துவத்தின் அங்கீகாரமின்றி இலவசமாக விநியோகிப்பதற்கு அங்கீகாரம் வழங்காதிருத்தல் வேண்டும். |
| (எ) | கம்பனியால் 2020 ஆம் ஆண்டிற்காக விற்பனை பிரிவின் உத்தியோகத்தர்களுக்கு ரூபா 3,240,890 ஊக்குவிப்பு படியாக செலுத்தப்பட்டிருந்ததுடன் இந்த ஊக்குவிப்பு படி 2020 திசெம்பர் மாதம் முதல் செலுத்துவதற்கு | கம்பனியால் விற்பனை பிரிவின் நடவடிக்கைளின் மேற்பார்வை 2015 ஆம் ஆண்டு முதல் முன்னாள் நிறைவேற்று பணிப்பாளரினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் முதலாவதாக 2016 | சரியான அங்கீகாரத்தை பெற்று கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

பணிப்பாளர் சபை அங்கீகாரம் உரித்தாக இருந்த போதும் 2020 சனவரி முதல் நவம்பர் வரை ரூபா 3,082,007 தொகை சரியான அங்கீகாரமின்றி செலுத்தப்பட்டிருந்தது. மேலும் இந்த ஊக்குவிப்பு படி செலுத்தும் போது இலக்கிடப்பட்ட விற்பனை அளவை அடைந்து கொள்ளாத உத்தியோகத்தர்களுக் காகவும் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. 2020 சனவரி மாதத்திலிருந்து விற்பனை இலக்கை அடையாதிருந்த உத்தியோகத்தர்களுக்கு ரூபா 125,012 தொகை செலுத்தப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

ஆம் ஆண்டின் யூலை மாதம் முதல் இந்த ஊக்குவிப்பு படி செலுத்துதல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. பின்னர் மீண்டும் 2017 செப்தெம்பர் மாதம் முதல் முன்னாள் தலைவரின் அங்கீகாரத்தின் கீழ் 2018 மே மாதம், 2019 யூலை மாதம் என உரிய ஊக்குவிப்பு படி செலுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. பின்னர் 2020 நவம்பர் மாதம் பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது இந்த படிகள் செலுத்தவதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

(ஏ) 12 கள உத்தியோகத்தர்கள் விற்பனை பிரிவில் சேவையாற்றியிருந்ததுடன் அந்த ஒவ்வொரு உத்தியோகத்தர்களினதும் பதவிகளின் படி முறையான பிரகாரம் எழுத்து மூலமாக கடமைகள் கையளிக்கப்பட்டிருக்க வில்லை. மேலும் ஒவ்வொரு உத்தியோகத்தர்களுக்கும் மாதாந்த வேலைத் திட்டமொன்றை வழங்குதல், அதன் அடிப்படையில் செயலாற்றலை மதிப்பிடுதல் மற்றும் உரிய துறைகளில் கடமைகளை நிறைவேற்றுவதை முறையான பிரகாரம் உறுதிப்படுத்துதல் போன்றவைகள் மேற்கொள்ளப்படுகின்றமை அவதானிக்கப்படவில்லை. இந்த உத்தியோகத்தர்கள் நேரடியாக விற்பனை சந்தர்ப்பங்களில் கம்பனிக்கு வந்து செல்லாதிருந்ததுடன் விற்பனை முகவர்களின் பணிகளுக்காக ஒத்துழைப்பைக் காண்பிக்கின்றமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் ஒரு விற்பனையின் அடிப்படையில் விற்பனை முகவர்களுக்கும் விற்பனை பிரிவின் உத்தியோகத்தர்களுக்கும் ஊக்குவிப்பு படி

இந்த கள உத்தியோகத்தர்களுக்கு அந்த பதவிகளுக்கான உரிய கடமைகள் எழுத்துமூலம் கையளிக்கப்பட்டுள்ளதுடன் அந்த கால எல்லையிலும் அவர்களின் கடமை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஜீபீஎஸ் தொழில்நுட்பம் மூலம் பரீட்சிக்கப்படுகின்றது. விசேடமாக இந்த உத்தியோகத்தர்களினால் அவர்களின் விற்பனை அதிகார பிரதேசத்திலுள்ள விற்பனைச்சாலைகளில் இருந்து கட்டளைகள் பெறப்பட்டு அந்தந்த விற்பனை முகவர்களுக்கு அந்தந்த கட்டளைகள் வழங்குதல் மேற்கொள்ளப்படுகின்றது. எந்த நிறுவனத்தின் விற்பனை என மிகவும் தெளிவாக இருந்தமையால் ஏதாவதொரு அந்த கட்டளையை பெற்ற பிரதேசத்திற்காக விற்பனை முகவர் இல்லாதிருக்குமாயின் அந்த கட்டளைகள் அந்த மாவட்டத்தில் இருக்கின்ற ஏனைய விற்பனை முகவர்களின் கட்டளைகள் கவனத்தில் கொள்ளப்படுகின்றது. அதன் பிரகாரம் இந்த கட்டளையை

சகல உத்தியோகத்தர் களுக்கும் தமது பதவிகளுக்குரிய எழுத்துமூல கையளித்தல்கள் மேற்கொள்ளப் படுதல் வேண்டும், செயலாற்றல் மதிப்பீட்டிற்காக பணிப்பாளர் சபை அங்கீகரித்த முறையான திட்ட முறைமையொன்று தயாரிக்கப்பட வேண்டியதுடன் கம்பனியின் செலவினங்களை புத்திசாலித்தனமாக மேற்கொள்ளல் தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பெற்றுக் கொண்டு கட்டளைகளை உரிய நேரத்தில் அனுப்புதல் போன்ற விடயங்கள் தொடர்பாக நிறுவனத்தின் விற்பனை முகவர்களை ஊக்குவிக்கும் நோக்கில் வழங்கப்படுகின்ற படியாகும். | |
| (ஐ) | 1994 ஆம் ஆண்டு முதல் 30 வருட காலப்பகுதிக்காக நீண்டகால குத்தகை அடிப்படையின் கீழ் பெறப்பட்ட மஹலேவாய காணிக்காக 2021 நவம்பர் 15 கணக்காய்வுத் திகதி வரையிலும் குத்தகை உரித்துறுதி தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. நீண்டகால குத்தகை அடிப்படையின் கீழ் பெறப்பட்டிருந்த கொஹொலங்கல மற்றும் புந்தல உப்பளங்களின் காணிகளின் குத்தகை கால எல்லை தொடர்பான தகவல்கள் வெளிப்படுத்தப்படாதிருந்த துடன் அந்தக் காணிகளுக்காகவும் குத்தகை உரித்துறுதி தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த மூன்று உப்பளங்களிலும் சரியான நிலப்பிரதேசத்தை இனங்கண்டு குத்தகை உடன்படிக்கையை தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அதற்காக எமது நிறுவனத்தினால் மேற்கொள்ள வேண்டிய சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. காணி ஆணையாளர் திணைக்கத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது | குத்தகை உரித்துறுதியை தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் பின்தொடர் நடவடிக்கைகளை எடுத்தல். |
| (ஓ) | கம்பனியால் உப்பு போக்குவரத்து வருமானத்தின் அடிப்படையில் சாரதிகளுக்கும் மற்றும் உதவியாளர்களுக்கும் மேலதிக படியொன்று செலுத்தப்படுவதுடன் ரூபா 7,579,030 வருமானமொன்று கம்பனிக்கு கிடைக்காதிருக்கும் போது அதன் அடிப்படையில் ரூபா 1,541,221 தொகை மேலதிகப் படியாக செலுத்தப்பட்டிருந்தது. | தற்போது விசாரணை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | கொடுப்பனவுகளை உறுதிப்படுத்தும் போதும் அங்கீகரிக்கும் போதும் அந்தக் கொடுப்பனவுகளின் சரியான தன்மை மற்றும் நியாயமாக உறுதிப்படுத்தியதன் பின்னர் மாத்திரம் உறுதிப்படுத்தலும் அங்கீகரித்தலும் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மஹலேவாய, பழட்டுப்பான மற்றும் புந்தல உப்பளங்களின் பிரதான களஞ்சியங்களில் பல்வேறு கருவிகள் மற்றும் உதிரிப்பாகங்களின் கீழ் ரூபா 2,183,924 பெறுமதியான இருப்பொன்று 02 வருடங்களுக்கு | மெதுவாக அசைவுறும் மற்றும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத பொருட்கள் தொடர்பான சகல விபரங்களும் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து | கம்பனியின் தேவையின் பிரகாரம் கொள்வனவு செய்வதற்கும் சரியான இருப்புக் |

| | | | |
|---|---|---|---|
| | மேற்பட்ட காலம் முதல் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டதுடன் ரூபா 10,001,126 பெறுமதியான மெதுவாக அசைவுறும் இருப்பொன்றும் அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பிரகாரம் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும். | கட்டுப்பாட்டை பேணிச் செல்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கம்பனியினால் 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது விலைப் பட்டியல் இடப்பட்ட பட்டியல் பெறுமதி ரூபா 4,947,200 தொகையான 611 மெற்றிக்தொன் உப்பு இருப்பு 2021 நவம்பர் 30 ஆந் திகதி வரையிலும் கொள்வனவாளரினால் எடுத்துச் செல்லப்பட்டிருக்கவில்லை. விற்பனை செய்யப்பட்ட உப்பு இருப்பை நியாயமான காலத்தில் அகற்றுதல் மற்றும் அவ்வாறு இல்லாத கொள்வனவாளரிடமிருந்து கட்டணங்களை அறவிடும் திட்டமுறைமையொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன் இவ்வாறு இருப்புக்கள் விடுவிக்கப்படாமையின் காரணமாக நிறுத்தி வைத்தல் கிரயம் மற்றும் இருப்பு விரயமாகும் ஆபத்து காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | கம்பனியின் விற்பனை கொள்கையாக உப்பு கொள்வனவு செய்வதற்காக கொள்வனவாளர்களினால் பணம் வைப்புச் செய்யப்பட்டு பட்டியல் விநியோகிக்கப்பட்டதன் பின்னர் அந்த பட்டியல்களுக்குரிய உரிய உப்பு இருப்பு நிறுவன சுற்றாடலில் இருந்து அகற்றப்பட்டதன் பின்னர் விற்பனையாக கணக்கீடு செய்யப்படுகின்றது. கொள்வனவாளரிடமிருந்து கட்டணம் அறவிடும் திட்ட முறைமையொன்றை தயாரித்து அமுல்படுத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | உப்பு இருப்பை அகற்றுவதற்காக கொள்வனவாளர் களுக்கு நியாயமான காலமொன்றை நிர்ணயித்து அவ்வாறு அகற்றப்படாத உப்பு இருப்புக்கள் தொடர்பாக மேலதிக கட்டணத்தை அறவிடும் திட்ட முறைமையொன்று அறிமுகப்படுத்துதல் வேண்டும். |
| (இ) | உபகட்டுநிதி வழங்கப்படுகின்ற பணிகள் நிறைவுபெற்றதும் உடனடியாக தீர்த்து வைக்கப்பட வேண்டிய போதிலும் 2019 சனவரி 01 ஆந் திகதி முதல் 2021 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை 14 சந்தர்ப்பங்களின் போது விநியோகிக்கப்பட்ட ரூபா 231,980 கூட்டுத்தொகையான முற்பணமும், பல்வேறு வழங்கல் மற்றும் சேவைகளுக்காக 2012 ஆம் ஆண்டு முதல் 2021 செப்தெம்பர் வரை 55 சந்தர்ப்பங்களின் போது வெளி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 4,423,277 கூட்டுத் தொகையான முற்பணமும் 2021 நவம்பர் கணக்காய்வுத் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக வழங்கப்படுகின்ற முற்பணத்தை தீர்த்து வைப்பதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் புதிய சுற்றுநிருபம் விநியோகிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் முற்பணம் வழங்குதல் மற்றும் தீர்த்தல் சரியாக மேற்கொள்வதற்கு இணங்குகின்றோம். | முற்பணம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர்க ளிடமிருந்து உரிய முற்பணம் தீர்க்கப்படாமை தொடர்பாக எழுத்து மூலம் விடயங்களை கோருதல் மற்றும் விரைவாக முற்பணத்தை தீர்த்து வைப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

### 3.3 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2006 இன் அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் பந்தியின் பிரகாரம் கம்பனிக்காக ஆகக்குறைந்தது 03 வருட காலத்திற்காக பிரதான பெறுகைத் திட்டமொன்று மற்றும் 2020 ஆம் ஆண்டிற்கான பெறுகை நடவடிக்கைகளை விரிவாக காண்பிக்கின்ற வருடாந்த பெறுகைத் திட்டமொன்றும் தயாரித்து அங்கீகரிக்கப்பட்டிருக்க வில்லை. | லங்கா சோல்ட் லிமிட்டெட் கம்பனியில் அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவைகள் பின்பற்றப்படாதிருந்ததுடன் 2006 இன் அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் பந்தியின் பிரகாரம் கம்பனியின் செயற்பாடு களுக்காக பெறுகை நடைமுறை தொடர்பாக முன்னனி ஆலோசனையாளரின் தலைமையின் கீழ் பயிற்சி பாடநெறியொன்று கம்பனியின் கட்டிடத்தில் நடாத்தப்படுவதுடன் அந்த பயிற்சியின் பின்னர் கம்பனியில் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத் தருகின்றோம். | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | கம்பனியால் நிதி முகாமையாளர், உள்ளக கணக்காய்வாளர் மற்றும் பெறுகைகள் மற்றும் வழங்கல் முகாமையாளர் போன்ற பதவிகளுக்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்காக நேர்முகப்பரீட்சை 2020 திசெம்பர் 04 ஆந் திகதி நடாத்தப்பட்டிருந்ததுடன், 2020 திசெம்பர் 22 மற்றும் 24 ஆந் திகதிகளின் போது தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்களுக்காக நியமனக் கடிதம் வழங்கப்பட்டிருந்தது. கம்பனியின் | கம்பனியால் நிதி முகாமையாளர், உள்ளக கணக்காய்வாளர் மற்றும் பெறுகைகள் மற்றும் வழங்கல் முகாமையாளர் போன்ற பதவிகளுக்கு பொருத்தமானவர்களை நியமிப்பதற்காக 2021 யூன் மாதம் 26 ஆந் திகதி Sunday Observer பத்திரிகை மற்றும் தினமின பத்திரிகையிலும் பிரசுரிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் கம்பனிக்கு கிடைத்த விண்ணப்பங்களுக்கு இடையே தகைமையுடையவர்களுக்கு 2020.12.04 ஆந் திகதி நேர்முகப் | அத்தியாவசிய பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக அசாதாரணமான காலமொன்று எடுக்காதிருப்பதுடன் அந்த நியமனங்கள் முறையான பிரகாரமும் வெளிப்படை யாகவும் மேற்கொள்ளப்பட வேண்டும் மற்றும் கணக்காய்விற்காக தேவையான |

| | | | |
|---|---|---|---|
| | பதவியணியினர் பதவிகளுக்குரிய நியமன அதிகாரியாக கம்பனியின் பணிப்பாளர் சபை இருந்த போதிலும் இந்த பதவிகளுக்குரிய பணிப்பாளர் சபை அங்கீகாரம் 2021 திசெம்பர் 23 ஆந் திகதி அதாவது நியமனம் வழங்கப்பட்டு ஒரு வருட காலம் கடந்த பின்னரே வழங்கப்பட்டிருந்தது. சிரேஷ்ட நிறைவேற்று நிலையின் பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக நீண்ட காலம் எடுத்திருந்ததுடன் அந்த நியமனங்கள் முறையான பிரகாரம் மேற்கொள்ளாமையின் மூலம் அந்த பிரிவுகளின் நடவடிக்கைகளை சரியாக நிறைவேற்றுவதற்கு பாதகமாக தாக்கமளித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், மேற்கூறப்பட்ட பதவிகளுக்குரிய நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்பதாரர்களிடமிருந்து பெறப்பட்ட புள்ளிகளை உள்ளடக்கிய நேர்முகப் பரீட்சை கோவை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் உரிய நியமனம் வெளிப்படையாக இருந்ததா என்பது தொடர்பில் கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | பரீட்சைக்காக அழைக்கப்பட்டிருந்தனர். நேர்முகப் பரீட்சையின் போது தெரிவு செய்யப்பட்டவர்களுக்காக தலைவரினால் நியமனக் கடிதம் 2020 நவம்பர் 27 ஆந் திகதி நடைபெற்ற 435.28 பணிப்பாளர் சபை தீர்மானத்தின் வழங்கப்பட்டது. அதன் பிரகாரம் உரிய உத்தியோகத்தர்களுக்கு கடமை பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டு நிறுவனத்தில் அந்த பிரிவுகளின் செயற்பாடுகள் செயற்திறனாகவும் இலகுவாகவும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த பிரிவுகளின் நடவடிக்கைகள் வீழ்ச்சியடையாமல் மேற்கொள்வதன் மூலம் நிறுவனத்தின் உற்பத்தி செயற்பாட்டு நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு முடியுமாக உள்ளது. | எழுத்து மூல தகவல்களை வழங்குதல் மற்றும் வழங்காமை தொடர்பாக கண்டறிதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளது. |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியின் பதவியணியினரில் 22 பதவிகளில் 42 ஊழியர்களின் மிகையொன்று அவதானிக்கப்பட்டது. | பல்வேறு காரணங்களின் அடிப்படையில் ஏதாவதொரு ஊழியரில் மிகையொன்று (42 ஊழியர்கள்) காணப்பட்ட போதிலும் அதற்கு முன்னர் இருந்த ஊழியர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கம்பனியின் பதவிகளின் எண்ணிக்கைக்காக முறையான அங்கீகாரம் பெற்றுக் கொள்ள வேண்டியிருந்ததுடன் அந்த அங்கீகாரத்தின் எல்லையினை விஞ்சி ஆட்சேர்த்தல் மேற்கொள்ளாதிருத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டின் போது கம்பனியினால் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகள், அமுல்படுத்தப்படுகின்ற கால அட்டவணை மற்றும் அந்த செயற்பாடுகளில் எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மற்றும் பிரதான செயலாற்றல் குறிகாட்டிகளை காண்பிக்கும் 2020 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | 2017, 2020 ஆம் ஆண்டுகளுக்குரிய ஆவணங்கள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அவை யாவற்றையும் எதிர்காலத்தில் மேலும் முறைமைப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டுள்ளது. | கம்பனி எதிர்பார்த்த பணிப் பொறுப்புக்களின் பிரகாரம் ஒவ்வொரு ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளது. |